## த.வெ.க. பாசிச கோமாளிக் கூட்டத்திற்கு

# எங்கள் தலைவர்களைப் பற்றிப் பேச தகுதியோ அருகதையோ இல்லை!

## அமைச்சர் நிர்மல்குமாரின் தரம் தாழ்ந்த பேச்சுக்கு – கழக செய்தித் தொடர்புக்குழு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி பதிலடி!

சென்னை, ஜூலை 29-

**அமைச்சர் நிர்மல் குமாரின் தரம் தாழ்ந்த பேச்சிற்கு கழக செய்தித் தொடர்புக் குழுத் துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ண மூர்த்தி பதிலடி கொடுத்துள்ளார். வதந்தி பரப்புவதும், கட்சி மாறுவதும் தான் அமைச்சர் நிர்மல் குமாரின் தகுதி என்றும் - த.வெ.க. பாசிச கோமாளிக் கூட்டத்திற்கு எங்கள் தலைவர்களைப் பற்றி பேசத் தகுதியோ அருகதையோ இல்லை என்றும் அவர், தனது பேட்டியில் குறிப்பிட்டார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

அமைச்சர் நிர்மல் குமார் எங்களுடைய தலைவர்கள் குறித்து வாய்க்கு வந்ததை எல்லாம் தரந்தாழ்ந்து பேசி இருக்கிறார். தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர், இந்த அரசினுடைய அமைச்சர் என்கிற தகுதியெல்லாம் மறந்து, ஃபேக் நியூஸ் பரப்பக்கூடிய, வதந்தி பரப்பக்கூடிய அந்த நிலையிலிருந்து எங்களுடைய தலைவர்கள் குறித்து அவர் பேசியிருக்கிறார். அவருடைய தலைவர் எப்படி அநாகரிகமாக பேசுவாரோ, அதே பாணியில், அதே வகையில், அதே வளர்ப்பின் அடிப்படையில் அவர் பேசியிருக்கிறார். ஆனால் எங்கள் தலைவர்கள் எங்களை அப்படி வளர்க்கவில்லை. அதே சமயம் திமுக தலைவர்கள் குறித்து தொடர்ந்து இதுபோல அவர் பேசி வருவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தகுதி இருக்கா என்று எங்கள் தலைவர்கள் குறித்து கேட்டிருக்கிறார். எது தகுதி? ஒரு டெக்ஸ்டைல் கடைக்கு போனீங்கன்னா அங்க இருக்கக்கூடிய கட்சி வேட்டியெல்லாம் எண்ணீங்கன்னா, அதைவிட அதிகமான எண்ணிக்கை யில் பல கட்சிகளுடைய கட்சி வேட்டியை வீட்டு அலமாரியில் வச்சிருக்கக் கூடிய சி.டி.ஆர். நிர்மல் குமாருக்கு இருப்பதுக்கு பேர்தான் தகுதியா? அவர் பரப்பின வதந்திகள் எத்தனை என ஒரு செகண்ட் எடுக்கலாம். அவர் போயிட்டு வந்த கட்சி எத்தனை அப்படிங்கிறதை கையால எண்ண முடியாது, அந்த அளவிற்கு வதந்தி பரப்புவதையும்கட்சி மாறுவதையும் மட்டுமே தொழிலாக வைத்திருக்கக்கூடிய சி.டி. ஆர். நிர்மல் குமாருக்கு இருக்கறதுக்கு பேர்தான் தகுதியா?

**ஆயிரக்கணக்கில் கரண்ட் பில்!**

அவருடைய கட்டுப்பாட்டில் இரண்டு துறை இருக்கிறது. ஒன்று மின்சாரத் துறை, இன்னொன்று சட்டத்துறை. மின்சாரத் துறையில் தினசரி மின்வெட்டு என்று தமிழ்நாடு முழுக்க போராட்டங்கள் நடக்காத நாளே இல்லை என்கிற அளவிற்கு இரவில் மக்கள் வீதியில் வந்து “எங்களுக்கு கரண்ட் கொடுங்க” என்று நடுரோட்டில் நின்று கதறிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அம்மா, “நான் குடிசை வீட்டில் இருக்கேன், வீட்டில் பிரிட்ஜ் கிடையாது, ஏசி கிடையாது, ஒன்னும் கிடையாது, ஆயிரக்கணக்கில் கரண்ட் பில் வந்திருக்கு” என்று ஈபி ஆபீஸ் வாசலில் நின்று கதறுகிறார்.

இன்றைக்கு ஒரு அம்மா, “என்னுடைய வேலையே கம்ப்யூட்டரையும் கரண்டையும் நம்பிதான் இருக்கு. ஈபி பிரச்சனையினால என் வேலை போயிடும் போல இருக்கு, நான் கரண்டுக்காக பிச்சை எடுக்கிறேன். என்ன வேலைக்காகவும் சோத்துக்காகவும் பிச்சை எடுக்க விட்டுறாதீங்க” என்று கதறக்கூடிய காட்சி பார்க்கிறோம். தமிழ்நாடு முழுக்க மின்வெட்டால் மக்கள் அவதிப்படுகிறார்கள். மின்சாரக் கட்டணத்தின் விலை உயர்வு நெஞ்சில் கை வச்சுட்டு உட்காரும் அளவுக்கு ஷாக் அடிக்கக் கூடிய அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அறிவிக்கப்படாத கட்டண உயர்வாக அது இருக்கிறது. இது குறித்தெல்லாம் எந்த பதிலும் இல்லாத, எந்த அக்கறையும் இல்லாத, எந்த அறிவும் இல்லாத சி.டி.ஆர். நிர்மல் குமார் அவர்கள் எங்கள் தலைவர்களுடைய தகுதி குறித்து கேள்வி எழுப்புகிறார்.



அவருடைய இன்னொரு துறை சட்டத்துறை. அதில் என்ன நடக்கிறது என்றால், இன்றைக்கு காலையில் எல்லாரும் பார்த்திருப்பீர்கள் – ஒரு ஆடியோ வைரல் ஆயிற்று. அரசு வழக்கறிஞர் பதவிக்கு மற்றவர்களுக்கு 15 லட்சம், உனக்கு 12 லட்சம் ரூபாய் என்று ஏதோ ஆடி ஆஃபர் கொடுப்பது மாதிரி அரசு வழக்கறிஞர் பதவியை ஆஃபரில் விற்பது போல் விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**கோமாளித்தனமான பேச்சு!**

உங்களுடைய துறையில் நடக்கக்கூடிய இவ்வளவு பெரிய ஊழல் குறித்து இதுவரைக்கும் சி.டி.ஆர். நிர்மல் குமார் வாய் திறந்திருப்பாரா? இது குறித்து கட்டுப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையாவது எடுத்திருப்பாரா? இதையெல்லாம் கட்டுப்படுத்த முடியாத அவர் எங்களுடைய தலைவர்களின் தகுதி பற்றி பேசுவது எவ்வளவு நகைச்சுவை. அது ஒரு கோமாளித்தனமான பேச்சாகத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

இன்னொரு பக்கம், பாலியல் புகார் கொடுக்கப்பட்ட ஒரு பெண் தவெக எம்.எல்.ஏ “என்னை மிரட்டுகிறார்” என்று குற்றச்சாட்டு வைக்கிறார். அந்த எம்.எல்.ஏவுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு கொடுக்கிறது இந்த அரசு. ஒரு மந்திரி ஸ்டேடியத்துக்குள் உட்கார்ந்து கொண்டு மாத்திரை நுணுக்குகிறார். அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இன்றைக்கு ஒரு அமைச்சரின் ஆடியோ ரிலீஸ் ஆகியிருப்பதாக தகவல் வருகிறது. அதில் “கொன்னு வெளியே எடுத்துருவேன்”, “என் பார்டரை தாண்டாதே” என்றெல்லாம் டயலாக் இருக்கிறது.

இதெல்லாம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கும் போது, ஊர் எக்கேடு கெட்டால் என்ன, என்னுடைய படை பரிவாரங்கள் எவ்வளவு அயோக்கியத்தனங்களை பண்ணினால் என்ன, எனக்கு பத்தாவது மாடியில் ஃபுல் சி வியூவோட ஆபீஸ் இருந்தால் போதும் என்று சொகுசை என்ஜாய் பண்ணக் கூடிய அந்த தன்மைக்கு பெயர் கோமாளித்தனமா இல்லையா? என்று மக்கள் கேட்கிறார்கள்.

இன்றைக்கு இந்திய நாடு முழுக்க நீட் தேர்வுக்கு எதிராக, பாஜகவுக்கு எதிராக மக்கள் போராடி வருகிறார்கள். மாணவர்கள் ரோட்டில் வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். மாணவர் சமுதாயம் ஒன்று திரண்டு ஒரு மந்திரியையே பதவியிலிருந்து இறக்கியிருக்கிறது. அது குறித்து வாயே திறக்காத ஒருவர் இருக்கிறார் என்றால், அவர் இந்த தமிழ்நாட்டின் முதலமைச்சர் தான்.

கோவைக்கும் மதுரைக்கும் மெட்ரோ கிடையாது என்று இரண்டாவது முறையாக ரிஜெக்ட் பண்ணியிருக்கிறார்கள். அதை எதிர்த்து இப்போது வரை முதலமைச்சர் வாயே திறக்கவில்லை. நிதியாண்டின் முதல் குவாட்டரில் போன ஆண்டை விட இந்த ஆண்டு ஒன்றிய அரசாங்கத்தின் நிதி 2,500 கோடி ரூபாய் குறைந்திருப்பதாக செய்தி வருகிறது. அதை எதிர்த்து கேள்வி கேட்பதற்கு இந்த முதல மைச்சருக்கு திராணி கிடையாது. தமிழ்த் தாய் வாழ்த்தை மூன்றாவ தாகத்தான் பாடுவோம் என்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒரு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பப்ளிக்காக செய்தி கொடுக்கிறார். அந்த துணைவேந்தரை கண்டிப்பதற்கு வக்கு கிடையாது. முடிஞ்சா பா.ஜ.க.வைக் கண்டிக்கிறேன், பாஜகவை எதிர்க்கிறேன் என்று உங்க தலைவர் ஒரே ஒரு வார்த்தை பேசச் சொல்லுங்கள்.

தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் ஆபீஸுக்கு புகார் கொடுக்க வருபவர்கள் தீக்குளிக்க முயல்கிறார்கள். இந்த லட்சணத்தில்தான் ஆட்சி இருக்கிறது. நாகரீகம் இல்லாமல் பேசுவதை முதலில் நிறுத்தினீர்கள் என்றால் நல்லது. நிறுத்தவில்லை என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் அதை எப்படி எதிர்கொள்ளுமோ அப்படி எதிர் கொள்ளும்.

**களத்தில் நின்று போராடிய தி.மு.க.!**

அமைச்சர் நிர்மல் குமார் அவருக்கு அந்த கட்சியில் எந்த மதிப்பும் இல்லை, மரியாதையும் இல்லை. மதுரையைச் சேர்ந்த அமைச்சர் அவர்; ஒரு நிகழ்ச்சிக்கு போகிறார், மதுரையைச் சேர்ந்த எம்.எல்.ஏக்கள் அந்த நிகழ்ச்சிக்கு வரவில்லை என்று ஸ்டேஜை விட்டு இறங்கி ஓடுகிறார். அவ்வளவு தான் அவருக்கு அக்கட்சிக்குள் மரியாதை.

ஒட்டுமொத்த ‘Gen Z’ எங்களுக்குத்தான் ஓட்டு போட்டார்கள் என்று அவர் கிரியேட் பண்ணி வைத்திருந்த அந்த நரேட்டிவுக்கு எதிராக, ‘Gen Z’ என்ற பெயரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் பெருமளவு இளைஞர்கள் வருகிறார்கள் என்பதை பொறுத்துக் கொள்ள முடியாமல் பேசுகிறார். நீட் எதிர்ப்பு போராட்டத்தை ‘Gen Z’ மூலம் ஹைஜாக் பண்ண அட்டெம்ப்ட் பண்றாங்க என்கிறார்கள். அந்த போராட்டத்தை திமுக, நாம் தமிழர் என அனைத்து கட்சிகளும் போய் ஆதரித்தன. உங்களை எது தடுத்தது? பாஜக கோவிச்சுக்கும் என்கிற பயம்தான் உங்களைத் தடுத்தது. மதுரையில் காலேஜ் கிளாஸ்ரூமில் உட்கார்ந்திருந்த ஒரு ஸ்டுடண்டை தடுப்புக் காவலில் வைத்தீர்கள். தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இதெல்லாம் நடந்ததே இல்லையே! நீட்டுக்காக என்ன பண்ணினோம்? ஏ.கே. ராஜன் கமிட்டி அறிக்கை கொடுத்தது தி.மு.க. அரசு.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினோம். நீதிமன்றத்தில் வழக்கு நடத்தினோம், நாடாளுமன்றத்தில் பேசினோம். கட்சி ரீதியாகவும் தமிழ்நாடு முழுக்க போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள் நடத்தினோம். ஆனால் தவெக என்ன செய்தது.? எல்லாம் முடிந்த பிறகு ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்த பிறகு மாணவர்களை சந்திக்க அமைச்சர் ராஜ் மோகன் செல்கிறார். பாஜக என்ற வார்த்தையை கூட உச்சரிக்க பயம். அன்று நீங்கள் வருமான வரி வழக்கை எப்படி எதிர்கொள்ளலாம் என யோசித்து கொண்டிருந்த போது நீட் தேர்விற்கு எதிராக களத்தில் நின்று போராடியது திமுக. அமைச்சர் பதவி போனாலும் பரவாயில்லை என உண்ணா விரத போராட்டத்தில் காலந்துகொண்டவர் எங்கள் இளம் தலைவர் அவர்கள்.

நீட் தேர்விற்கு எதிராக திமுக தான் சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும், ரோட்டிலும் போராடியது. ஆனால் இவர்கள் என்ன சொல்கிறார்கள் நாளை ஒரு வாய்ப்பு வருமானால் நீட் விலக்கு பெறுவோம் என்கிறார், அப்படி என்றால் வாய்ப்பை இவர்கள் உருவாக்க வக்கில்லை. அதுவாக நடந்தால் அதன் மீது ஸ்டிக்கர் ஒட்டி கிரெடிட்டை திருடி கொள்வார்கள் அவ்வளவு தான். கல்வி அமைச்சர் ராஜ் மோகன் கூறுகிறார் கல்வியை ஒத்திசைவுப் பட்டியலுக்காகவது மாற்றுவோம் என்கிறார். ஏற்கனவே கல்வியானது ஒத்திசைவுப் பட்டியலில் தான் உள்ளது. இந்த மாதிரியான கேலிக்கூத்தை எல்லாம் செய்யும் த.வெ.க. பாசிச கோமாளிக் கூட்டத்திற்கு எங்கள் தலைவர்களைப் பற்றிப் பேச தகுதியோ அருகதையோ இல்லை.

இவ்வாறு அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது குறிப்பிட்டார்.

---

## கன்னியாகுமரி மாவட்டத்தில்

# செங்கல் தயாரிப்பின் மூலப்பொருளான மண் கிடைத்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!

### கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு!

குமரி, ஜூலை. 29 -

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அவர்களை கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரெ. மகேஷ் 27.07.2026 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நேரில் சந்தித்து முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தார்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய்மொழி, தோவாளை, ஈசாந்திமங்கலம், கடுக்கரை, கோழிக்கோட்டு பொத்தை, செண்பகராமன்புதூர், அச்சன்குளம் போன்ற ஊர்களில் சுமார் 500க்கும் மேற்பட்ட செங்கல் சூளைகள் அமைந்து அப்பகுதி மக்களின் பிரதான தொழிலாக உள்ளது. இந்த பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் செங்கல் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் வீடு மற்றும் வணிக கட்டட வேலைகளுக்கு முக்கிய மூலப்பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் செங்கல் தயாரிப்பதற்கு தேவையான மூலப்பொருளான மண் கிடைக்காமல் பல்வேறு செங்கல் சூளைகள் இயங்காமலும் உள்ளது. இந்த செங்கல் சூழைகளானது சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக குடிசைத் தொழிலாக இயங்கி வருகிறது.

இந்த நிலையில் தற்போது கனிமம் மற்றும் சுங்கத்துறை அதிகாரிகள் செங்கல் சூளை நடத்துவதற்கு உரிய அனுமதி பெற வேண்டும் என்று கூறி ஆய்வு மேற்கொண்டு உரிமம் இல்லாத செங்கல் சூளைகளை மூடி சீல் வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அதிகாரிகள் எந்தவித முன் அறிவிப்பும், உரிமம் பெறுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளுடன் போதிய அவகாசம் ஏதும் அளிக்காமல் இச்செயலில் ஈடுபட்டு வருவது இத்தொழிலில் ஈடுபட்டு வரும் பல்லாயிரக்கணக்கான ஏழை குடும்பங்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும் செயலாகும். மேலும் கட்டுமான தொழிலுக்கு தேவையான செங்கல் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டு கட்டட கட்டுமான பணிகள் பாதிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, மாவட்ட ஆட்சியர் பல்லாயிரக்கணக்கான ஏழை குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு இந்த பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் செங்கல் சூளை உரிமையாளர்கள் உரிமம் பெறுவதற்கு வழிகாட்டி நெறிமுறைகளுடன் கூடிய போதிய அவகாசம் வழங்கிட வேண்டும் என்றும், செங்கல் தயாரிப்பின் மூலப்பொருளான மண் கிடைப்பதற்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தேவையான நடவடிக்கை எடுத்திட வேண்டும் என கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் அளிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுத்த வேண்டிய பல்வேறு முக்கிய கோரிக்கைகளை மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ. மகேஷ் மாவட்ட ஆட்சியரிடம் முன்வைத்தார். அதில்

1. மயிலாடி பேரூராட்சிக்குட்பட்ட மயிலாடி பகுதியில் உலகப் புகழ்பெற்ற கல் சிற்ப தொழில் நடைபெற்று வருகிறது. இங்கு தயாரிக்கப்படும் கல் சிலைகளுக்கு புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றுள்ளது. இத்தொழிலில் சுமார் 5000திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கல், சிற்ப வேலைகளுக்கு தேவையான கற்கள் தற்போது வெளி மாவட்டங்களில் இருந்து பெறப்படுவதால், அதிக செலவினம் மற்றும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, இதனை தவிர்க்கும் வகையில் அதை கன்னியாகுமரி மாவட்டத்திலேயே சிற்ப தொழிலுக்கு தேவையான கற்கள் “மயிலாடி கல்சிற்பம் மற்றும் கோவில் கட்டுமான தொழிலாளர் நலச்சங்கம்” மூலமாக பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இப்பகுதியில் அடிக்கடி ஊருக்குள் புகும் வனவிலங்குகளை தடுக்க வனத்துறை சார்பில் தடுப்பு வேலி அமைக்க வேண்டும்.

2. கோவளம் சன்செட் பாயிண்ட் கடற்கரைப் பகுதியில் தோட்டக்கலைத் துறை சார்பில் பூங்கா அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதியை மீனவர்கள் வலைகளை உலர்த்தவும், மீன்பிடி சார்ந்த பணிகளுக்கும் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் இந்த இடத்தில் தான் மீனவ மக்கள் வழிபடும் சிலுவை பாதை புனித ஸ்தலம் மற்றும் புனித தெரேசா குடிசடியும் அமைந்துள்ளது. எனவே, மீனவ மக்களின் நலனையும் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு அங்கு பூங்கா அமைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும்.

3. கோவளம் ஊராட்சி டி.சி நகரில் புதிய நியாயவிலைக் கடை அமைக்கவும், ரேன்சம் டவுன் பகுதியில் உள்ள பகுதி நேர நியாயவிலைக் கடையினை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. மகாராஜபுரம் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தை உடனே திறந்து செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி.

5. ஞாலம் மற்றும் சகாய நகர் ஊராட்சி நைனார் பொத்தை பகுதியில் ஆற்று பாலம் அமைக்கவும், கல்லறை தோட்டம் செல்வதற்கான சாலை வசதி ஏற்படுத்தவும், விவசாயிகளின் கோரிக்கையான பள்ளி கொண்டான் கால்வாயினை உடனே தூர்வார வேண்டும்.

6. செண்பகராமன்புதூர் ஊராட்சி ஆதிச்சன்புதூர் பகுதியில் இயங்கி வரும் சதீஷ் நவீன அரிசி ஆலையிலிருந்து வெளியேரும் தூசியால் அப்பகுதி மக்கள் குறிப்பாக குழந்தைகள் மற்றும் வயதான முதியோர்களுக்கு ஆஸ்துமா உள்ளிட்ட உடல் நலப்பிரச்சனைகள் ஏற்படுவதாக பொதுமக்கள் புகார் அளித்தனர். இதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. பறக்கை ஊராட்சி பகுதியில் வீடுகளிலும் பொது இடங்களிலும் முறையாக குப்பை சேகரிக்கப்படுவதில்லை இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படும் அவல நிலை உள்ளது. எனவே, இதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

8. நாகர்கோவில் மாநகராட்சி, 45 மற்றும் 33 வது வார்டுக்குட்பட்ட மேலசூரங்குடி பகுதியில் சுமார் 500 குடும்ப அட்டைதாரர்கள் மாதத்தில் ஒரு நாள் மட்டுமே இயங்கும் நடமாடும் நியாயவிலைக் கடை மூலமாகவும், 1 கி.மீ. தொலைவில் உள்ள குருசடி மற்றும் கார்த்திகைவடலி பகுதியில் அமைந்துள்ள நியாயவிலைக் கடைக்கு சென்று பொருட்களை வாங்குகின்றனர். எனவே, இப்பகுதியில் உள்ள பொதுமக்களின் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு மேல சூரங்குடி பகுதியில் ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடை அமைத்திட கேட்டுக் கொள்கிறேன். இந்த நியாயவிலைக் கடைக்கு தேவையான மின்சாரம் மற்றும் கழிவறை வசதிகளுடன் கூடிய கட்டிடமும் ஊர் சார்பில் அமைத்து தருவதற்கு தயாராக உள்ளனர்.

நிகழ்வில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க பொருளாளர் ஐ.கேட்சன், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன், நாகர்கோவில் மாநகர வடக்கு மண்டல தலைவர் இ.ஜவகர், தெற்கு பகுதி செயலாளர் த.ஜீவா, மயிலாடி பேரூர் செயலாளர் சுதாகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கல்யாணசுந்தரம், சதிஷ் மற்றும் செங்கல் சூளை தொழிலாளர்கள் உட்பட பலர் இருந்தனர்.

---

# ஒட்டன்சத்திரத்தில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பணி!

### முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ.நேரில் ஆய்வு!

ஒட்டன்சத்திரம், ஜூலை 29-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.68 கோடியில் 480 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணியினை திண்டுக்கல் மேற்குமாவட்ட செயலாளர் அர. சக்கரபாணி எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தர விட்டார். இந்தநிகழ்வின் போது நகர்மன்ற தலைவர் திருமலைச்சாமி, நகர்மன்ற துணைத்தலைவர் வெள்ளைச்சாமி, ஆணையாளர் ஸ்வேதா, பொறியாளர் சுப்பிரமணியபிரபு, சுகாதார ஆய்வாளர் கார்த்திகேயன், நகர்ப்புறவாழ்விட மேம்பாட்டு திட்ட செயற்பொறியாளர் திவ்யா, ஒன்றிய செயலாளர் எஸ், ஆர்.கே. பாலு, நகர்மன்ற உறுப்பினர்கள் கண்ணன், செல்வராஜ், சாந்தி ஆறுமுகம், மகாராணிஏசுராஜ், பழனிச்சாமி, சாந்திகருப்பணன், ஜெயமணி சரவணன், அருள் மணி நாட்ராயன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவபாக்கியம் ராமசாமி, ராமகிருஷ்ணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தினேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சுரேஷ் குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் சரவணன்,துணை அமைப்பாளர் செல்வகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பணியினைஅர. சக்கரபாணி எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

---

## முன்னாள் அமைச்சர் வே. தங்கபாண்டியன் நினைவுநாள் நிகழ்ச்சி!

# இராமநாதபுரம் மாவட்டக்கழகம் சார்பில் நினைவிடத்தில் புகழஞ்சலி!

### மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை!

இராமநாதபுரம்,ஜூலை 29-

முன்னாள் அமைச்சர் வே.தங்கப்பாண்டியன் அவர்களின் 29 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டக் கழகம் சார்பில் புகழஞ்சலி செலுத்துகிறார்கள் என்று மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.



விருதுநகர் மாவட்டக் கழக செயலாளராகவும், ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்தின் கழக வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியவரும், முன்னாள் அமைச்சருமான வ.தங்கப்பாண்டியன் நினைவேந்தலை முன்னிட்டு ஆண்டுதோறும் மாவட்டக் கழகம் சார்பில் நேரில் சென்று புகழ் அஞ்சலி செலுத்துவது வழக்கம். அதே போன்று இந்த ஆண்டும் வருகின்ற 31.07.2026 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி அளவில் விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணறு கிராமத்தில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் இராமநாதபுரம் மாவட்டக் கழகம் சார்பில் நேரில் சென்று அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற உள்ளது.

எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட, நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## பொள்ளாச்சி மகாலிங்கம் மகள்

# பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் மனைவி திருமதி.கருணாம்பாள் மறைவு!

### கழகத்தினர் – பொதுமக்கள் அஞ்சலி – தங்கம் தென்னரசு இரங்கல்!

சென்னை, ஜூலை 29-

கல்வி மற்றும் பாரம்பரியக் கலைகளை வளர்க்கும் தொண்டறத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவரும், சமத்தூர் ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்த கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்களின் துணைவியாரும், மறைந்த டாக்டர் பொள்ளாச்சி என். மகாலிங்கம் அவர்களின் புதல்வியும், சங்கர் வாணவராயரின் தாயாருமான, திருமதி.கருணாம்பாள் வாணவராயர் அவர்கள் நேற்று முன்தினம் (27.7.2026) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத்தினர் - சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் திரளாகச் சென்று மறைந்த திருமதி கருணாம்பாள் வாணவராயர் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர். மேலும் இச்செய்தியறிந்து, முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, அன்னாருக்கு என்



இதய மார்ந்த அஞ்சலியைச் செலுத்துகின்றேன். அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று இரங்கல் தெரிவித்துள்ளார்.